
யாழ்ப்பாணப் பல்கலைக் கழகம்



# சேர். பொன். இராமநாதன்
## நினைவுப் பேருரை - 2011

# பெரியபுராணம் புலப்படுத்தும் தத்துவமும் பண்பாட்டு மரபுகளும்


**பேராசிரியர் மா.வேதநாதன்,**
தலைவர். இந்துநாகரிகத்துறை.
யாழ்ப்பாணப் பல்கலைக்கழகம்.


2011.10.08

சேர். பொன். இராமநாதன்

நினைவுப் பேருரை

08.10.2011

# பெரியபுராணம் புலப்படுத்தும் தத்துவமும் பண்பாட்டு மரபுகளும்

# PHILOSOPHICAL AND CULTURAL TRADITIONS AS EXPOUNDED IN PRIYAPURANAM

பேராசிரியர் மா.வேதநாதன்,

தலைவர், இந்துநாகரிகத்துறை,
யாழ்ப்பாணப் பல்கலைக்கழகம்,
யாழ்ப்பாணம்.

•தலைப்பு : பெரியபுராணம் புலப்படுத்தும் தத்துவமும் பண்பாட்டு மரபுகளும்
• ஆசிரியர் : பேராசிரியர் மா.வேதநாதன் • ©: ஆசிரியர். •பக்கம் : 28
•அச்சிட்டோர்: கரிகணன் பிரிண்டேர்ஸ், காங்கேசன்துறை வீதி, யாழ்ப்பாணம்.
• வெளியீடு : யாழ்ப்பாணப் பல்கலைக்கழகம். 08.10.2011

# Message from the Vice-Chancellor

The University of Jaffna has its own traditional heritage and maintains its vision and mission by following the positive aspects of the tradition. As one of the tradition, and to honor and respect the services of Sir Pon Ramanathan this memorial lecture is conducted by the University of Jaffna following the $27^{th}$ Convocation has ideally occurred on the 6th of October 2011 and this memorial lecture falls to honor Sir Pon Ramanathan.

Prof.M.Vethanathan has come forward to deliver a lecture on 'Philosophical and Cultural Traditions' as expounded in Periyapuranam. 'Periyapuranam is well known among the Jaffna Tamils. The Sri Lanka system has Hinduism as a subject in the Schools and our children are well versant in Hinduism than the Hindu children in India. The Hinduism taught in schools also deals with 'Periyapuranam'and the Jaffna Tamils also appreciate its importance.

At this juncture Prof.M.Vethanathan has chosen a topic which is relevant to our society. Prof.M.Vethanathan who is a Professor of Hindu Civilization and a religious person is well suited to deliver this lecture. On behalf of the University I thank Prof.M.Vethanathan for delivering this lecture.

Prof.Vasanthy Arasaratnam,
*Vice -Chancellor.*

**பெருமதிப்புயர் வேந்தர் அவர்களே! பெருமதிப்புக்குரிய துணைவேந்தர் அவர்களே! பீடாதிபதிகளே! பேரவை உறுப்பினர்களே! பேராசிரியர்களே! துறைத்தலைவர்களே! விரிவுரையாளர்களே! சான்றோர்களே! மாணவர்களே! அனைவருக்கும் என் அன்பு வணக்கங்கள்.**

இலங்கையின் தேசியத் தலைவர்களுள் ஒருவராகக் கணிக்கப் படும் சைவப் பெருவள்ளல் சேர்.பொன்.இராமநாதன் அவர்களின் நினைவுப் பேருரையாக தேசிய இலக்கியமாக பாராட்டப்பெறும் சைவப் பெரும் காப்பியமான "பெரியபுராணம் புலப்படுத்தும் தத்துவமும் பண்பாட்டு மரபுகளும்" என்னும் பொருண்மையில் இன்றைய நல்ல நாளில் நினைவுப் பேருரையாற்றுவதில் மிகவும் மனநிறைவு அடைகின்றேன்.

சேர்.பொன்.இராமநாதன் இலங்கையின் தவப்புதல்வர்களில் ஒருவர். இவர் இலங்கை அரசியலில் சுமார் அரைநூற்றாண்டு காலம் ஈடு இணையற்றவராகப் பிரகாசித்தார்.

இவர், தீர்க்கதரிசனமாக நிறுவிய பரமேஸ்வராக் கல்லூரியே இன்று யாழ்ப்பாணப் பல்கலைக்கழகமாகவும், தமிழரின் அறிவுத் திருக்கோயிலாகவும் காட்சி தருகின்றது. மறைந்த பேராசிரியர் க.கைலாசபதி அவர்கள் இராமநாதன் பற்றிக் கூறும்போது, "தமிழிலக்கிய, இலக்கண சாத்திர நூற் புலமையுடன் தமிழ்ப்பண்பாட்டு உணர்வுடன் வாழ்ந்த தலையாய தமிழ் மகனாகவும் இந்நாட்டின் சமூகங்கள் அனைத்திற்கும் ஒற்றுமையையும், உயர்வையும் உன்னிய உத்தம தேசியவாதியாகவும் பன்மொழிப்புலமையாலும் ஞானமார்க்கத்தாலும் ஞாலத்தைத் தழுவிய சர்வதேசவாதியாகவும், முழுமையான வாழ்க்கை நடத்திய நவசனகர்" என்று குறிப்பிடுவது மிகவும் பொருத்தமான கூற்றாகும்.

"காரியசித்திக்குத் திரிகரணசுத்தி அவசியம்". இதுவே சேர்.பொன்.இராமநாதனின் மகுடவாசகமாகும். மானிப்பாயைப் பூர்வீகமாகக் கொண்ட இவர், கொழும்பில் பிறந்து, கொழும்பு றோயல் கல்லூரியில் பயின்று, தமிழகத்திலும் கற்றுத் தேர்ந்து நியாய வாதியாகவும் சட்டநிருபண சபை உறுப்பினராகவும் விளங்கிப் பன்முகப் பணிகளை ஆற்றிய பெருமைக்குரியவராவார். தான் தேடிய சொத்தெல்லாம் பரமேஸ்வரன் சொத்து எனக் கூறிய பண்பாட்டாளர். நல்லை செல்லப்பா சுவாமிகளின் ஆசிபெற்றவர். தஞ்சை அருட்பரானந்த சுவாமிகளை ஆன்மீகக் குருவாகக் கொண்டவர்.

ஆண்கள் கற்க திருநெல்வேலியிலும், பெண்கள் கற்க மருதனார் மடத்திலும் பாடசாலைகளை நிறுவியவர். யாழ்ப்பாணத்தில் சைவபரிபாலனசபை, சைவவித்தியா விருத்திச் சங்கம் ஆகியவற்றின் வளர்ச்சிக்கு அரும்பாடுபட்டவர். சைவசித்தாந்த மாநாடுகளுக்குத் தலைமை தாங்கியவர். கொழும்பில் பொன்னம்பலவாணேஸ்வரர் கோயிலை திராவிட பண்பாட்டுச் சின்னமாக முழுமையாக்கியவர். கோடைக்கானலில் 12 வருடங்களுக்கு ஒருமுறை பூக்கும் குறிஞ்சிமரத்தை உண்டாக்கிஅப்பூவால் முருகனுக்குப் பூசை செய்யவேண்டும் என்ற எண்ணத்தில் அங்கே முருகனுக்குக் கோயில் அமைத்தவர். சுவாமி விவேகானந்தர் அமெரிக்காவில் வேதாந்த தத்துவம் மற்றும் ஆன்மீக பண்பாட்டு மரபுகள் பற்றிப் பேருரையாற்றியது போல இவர் அமெரிக்காவில் சைவசித்தாந்தம் மற்றும் ஆன்மீகப் பண்பாடு பற்றிப் பேருரைகள் நிகழ்த்திய பெருமைக்குரியவர்.

1851 இல் பிறந்து 1930 வரை சுமார் 79 ஆண்டுகள் வாழ்ந்து அமரத்துவமடைந்த இவர் மரணமிலாப் பெருவாழ்வு பெற்ற மகானாக மதிக்கத்தக்கவர். இறவாத இன்ப அன்பைப் பெற்ற இவர் நினைவாக ஆண்டுதோறும் நடைபெறும் பட்டமளிப்பு விழாவினைத் தொடர்ந்து நினைவுப் பேருரை நிகழத்துவது யாழ் பல்கலைக்கழகத்தின் நன்றி மறவாத பண்பாட்டு மரபாகும். இவ்வழித்தடத்தில் இவ்வாண்டு இந்நினைவுப் பேருரையாற்றும் வாய்ப்பினை வழங்கிய யாழ். பல்கலைக்கழக துணை வேந்தர் மற்றும் கலைப்பீடாதிபதி என்போருக்கு எமது மனமுவந்த நன்றிகள் பல. யாழ்ப்பாணப் பல்கலைக்கழக நிர்வாக உத்தியோ கத்தர்களுக்கும் என் நன்றிகள் உரித்தாகுக.

இப்பேருரையாற்றுவதற்கு நிதிவழங்கிய பரமேஸ்வராக் கல்லூரி இயக்குனர் சபைக்கும் என் நன்றிகள்.

# பெரியபுராணம் புலப்படுத்தும் தத்துவமும் பண்பாட்டு மரபுகளும்

## அறிமுகம்

தமிழகப் பண்பாடு மரபுகளை நன்கு புலப்படுத்தும் சைவத்தமிழ் இலக்கியங்களுள் சேக்கிழார் இயற்றிய பெரியபுராணம் என வழங்கும் திருத்தொண்டர்புராணம் தனிச்சிறப்புடையதாக விளங்குகின்றது. பன்னிரு திருமுறைகளுள் பன்னிரண்டாம் திருமுறையாக வகுக்கப்பெற்றுள்ள இப்புராணம் சிவனடியார்களின் வாழ்வியலையும் சைவப்பண்பாட்டினையும் புலப்படுத்தும் சைவத்தமிழ்க் காப்பியமாகத் திகழ்கின்றது. உள்ளத்தாலும் உணர்வாலும் சொல்லாலும் செயலாலும் தூய்மை கொண்ட சிவனடியார்களின் வரலாற்றை மக்கள் அறிந்து அவர்கள் வாழ்ந்து காட்டிய நற்பண்பாட்டு விழுமியங்களைப் பின்பற்றுவதன் வாயிலாகத் தாமும் சமுதாயத்திற்குப் பெரும் பணியாற்ற முடியும் என்ற குறிக்கோளுடன் பெரியபுராணம் எனும் பண்பாட்டுப் பனுவலைச் சேக்கிழார் வழங்கியுள்ளார். தமிழின் முதல் சைவக் காப்பியமாக விளங்கும் இந்நூல் புலப்படுத்தும் சைவதத்துவம் மற்றும் சைவப்பண்பாட்டு மரபுகளை எடுத்துக் காட்டுவதாக இன்றைய இந்நினைவுப் பேருரை அமைகின்றது.

## பெரியபுராண மரபும் கட்டமைப்பும்

சைவ இலக்கிய மரபில் கி.பி. எட்டாம் நூற்றாண்டில் வாழ்ந்த சுந்தரமூர்த்தி நாயனார் இயற்றிய திருத்தொண்டர் தொகையைத் தொகை நூலாகவும், கி.பி. பத்தாம் நூற்றாண்டில் வாழ்ந்த நம்பியாண்டார் நம்பி இயற்றிய திருத்தொண்டர்திருவந்தாதியை வகைநூலாகவும் கொண்டே கி.பி. பன்னிரண்டாம் நூற்றாண்டில் வாழ்ந்த சேக்கிழார் பெரிய புராணத்தை விரிநூலாக அமைத்துள்ளார். இவ்வகையில் பெரியபுராணப் பனுவல்கள் ஒரு சைவப்பண்பாட்டு இலக்கிய மரபில் தோன்றியுள்ள மையை நன்கு புலப்படுகின்றது.

அறுபத்துமூன்று தீர்த்தங்கரர் வரலாற்றை சமணசமய நூலான மகாபுராணம் உரைப்பது போல, அறுபத்து மூன்று சைவநாயன்மார் வரலாற்றைப் பெரியபுராணம் புலப்படுத்துகின்றது.

இந்நூலை இரு காண்டங்களையும் பதின்மூன்று சருக்கங் களையும் 78 புராண உட்பகுப்புக்களையும் 4286 திருவிருத்தங்களையும் கொண்டதாகச் சேக்கிழார் கட்டமைத்துள்ளார்.

இச்சைவக் காப்பியத்துள் தமிழ்நாட்டில் பல்வேறு இடங்களில் வெவ்வேறு காலங்களில் வாழ்ந்த தனியடியார் அறுபத்து மூவரும்,

தொகையடியார் ஒன்பதின்மரும் ஆகிய திருத்தொண்டர் எழுபத்திருப ருடைய வரலாறும் மகிமையும் தெளிவுறக் கூறப்பட்டுள்ளது. இத்திருத் தொண்டர்களின் வாழ்க்கை வரலாறுகள் சைவப்பண்பாட்டு வரலாறு களாக வரையறுக்கத் தக்கவை எனலாம். இறைவனுக்கும் இறையடியார் களுக்கும் செய்யும் பணிகளையே சேக்கிழார், திருத்தொண்டு (Divine Service) என்று பெரியபுராணத்தில் சிறப்பித்துப் பாடியுள்ளார்.

பெரியபுராணம் பண்பாட்டு ஒற்றுமையைப் புலப்படுத்தும் சைவக் கருவூலமாக விளங்குகின்றது. பெரியபுராணம் கூறும் சிவனடியார்கள் ஒரே காலத்தில் வாழ்ந்தவர்கள் அல்லர். ஒரே தொழிலை மேற்கொண்டவர்களும் அல்லர். ஒரே இனத்தவரும் அல்லர். ஒரே குலத்தவரும் அல்லர்.

எத்தனை வேறுபாடுகள் இருந்தாலும் இவர்கள் அனைவரும் சிவனையும் சிவனடியார்களையும் ஒருவராகவே நினைந்து அன்புடன் வழிபடும் சிவத்தொண்டர்கள் என்ற பண்பாட்டு ஒற்றுமை உடையவர் களாக விளங்கினர் என்பதே பெரியபுராணப் பண்பாட்டின் தனிச்சிறப் பாகும். வேற்றுமையில் ஒற்றுமையைப் புலப்படுத்தும் சைவத் தமிழ்க் காப்பியமாகப் பெரியபுராணம் திகழ்கின்றது.

**பெரியபுராணப் பின்னணி**

பெரியபுராணம் புலப்படுத்தும் தத்துவமும் பண்பாட்டு மரபுகளும் பற்றிய புரிதலுக்கு அக்காப்பியம் தோற்றம் பெற்றதற்கான தத்துவநிலை, மற்றும் பண்பாட்டுப் பின்னணி பற்றிக் குறிப்பிடுவது அவசியமானதாகும்.

பெரியபுராணம், சோழப் பேரரசின் ஒடுங்குதிசைக்காலத்தில் கி.பி.பன்னிரண்டாம் நூற்றாண்டில் தோன்றிய சைவக் காப்பியமாகும். பக்தி நெறியின் பயனையும் திருத்தொண்டின் சிறப்பினையும் மீண்டும் மக்களுக்கு நினைவூட்ட வேண்டிய காலச் சூழ்நிலை சேக்கிழார் காலத்தில் நிலவியது.

வீழ்ச்சிப் பாதையில் விரைந்து சென்றுகொண்டிருந்த சோழப் பேரரசை மீண்டும் பழைய நிலைக்குச் செலுத்தித் தொண்டு, குறிக் கோளுடையவாழ்வு போன்ற பண்பாட்டு விழுமியங்களை மீண்டும் பழைய நிலைக்குக் கொண்டுவர இறுதியாகச் செய்யப்பெற்ற முயற்சியின் விளைவுதான் பெரியபுராணமாகும்.

பெரியபுராணம் தோன்றிய காலத் தமிழகத்தில் தத்துவமும் பண்பாடும் பெருவளர்ச்சி கண்டபோதும் ஒவ்வொரு சமயப் பிரிவினரும் தத்தம் தத்துவம் மற்றும் பண்பாட்டு மரபுகளையே பல வழிகளிலும் மேன்மை பெறச் செய்தனர். இக்காலத்தில் சமணசமயக் கொள்கைகள் வளர்ச்சி கண்டன. சமணக் காப்பியமான சீவக சிந்தாமணியின் செல்வாக்கு இக்கால மக்களிடம் நன்கு வேரூன்றி விளங்கியது. சீவக சிந்தாமணியின் செல்வாக்குக் காரணமாகவே பெரியபுராணம் தோற்றம் பெற்றதாக சேக்கிழார் புராணம் கூறுகின்றது. இக்காலத்தில் வைணவம் நன்கு வளர்த்தெடுக்கப்பட்டது. இராமானுஜரின் வேதாந்த தத்துவ சிந்தனைகள் வலுப்பெற்றன. சைவசித்தாந்த தத்துவத்தை வாழ்வியலாக்க வேண்டுமென்ற உணர்வு மேலோங்கி விளங்கியது.

சைவப்பண்பாட்டை வளர்ப்பதற்கு அரச ஆதரவு பெருமளவிருந்தது. சேக்கிழார் காலத்தில் அரசாண்ட அநபாய சோழ மன்னரிடம் (2வது குலோத்துங்கன்) காணப்பட்ட சைவப்பேராதரவே பெரியபுராணம் உருவாகுவதற்குப் பெரிதும் உதவியது.

நாயன்மார் வழிபாடு விருத்தியுற்று விளங்கியதால் அவர்களின் வாழ்வியலைப் பதிவு செய்ய வேண்டிய பண்பாட்டுச் சூழ்நிலை நிலவியது. வர்ணத்தாலும், சாதியாலும், தொழிலாலும் வேறுபட்டு விளங்கிய மக்களை, சிவத்தொண்டர்கள் என்ற ஒரே குடையின்கீழ் கொண்டு வரவேண்டிய சமூகப்பண்பாட்டுச் சூழ்நிலையில் பெரியபுராணம் தோற்றம் பெறுகின்றது.

சேக்கிழார், சோழப் பேரரசில் அமைச்சராக இருந்ததனால் அவர் நாட்டின் பல இடங்களுக்கும் அரச முறைப் பயணம் மேற்கொண்டிருக்கலாம். நாயன்மார்கள் வாழ்ந்த இடங்களுக்கு அவர் நேரில் சென்று அவ்விடங்களில் அறிந்த செய்திகளையும் தாம் கற்றும் கேட்டும் அறிந்தவற்றையும் இணைத்து சைவப் பண்பாட்டுக் கருவூலமான பெரியபுராணத்தை எமக்கு அருளியுள்ளார் எனலாம்.

**தத்துவம் - வரையறை**

"தத்துவம்" என்ற சொல்லுக்கு உண்மை என்பது பொருள். இதற்கு "அறிவார்வம்" அல்லது "ஞானத்தில் வேட்கை" என்று பொருள் கூறலாம். அறிவுக்கோட்பாடு, புலன்கடந்த நுண்பொருட்கோட்பாடு, அறவியல் கோட்பாடு, அழகியல் கோட்பாடு என்பன தத்துவத்தின் உட்பெரும் பிரிவுகளாகும். இன்று தத்துவம் எல்லாவற்றுடனும் இணைத்து நோக்கப்படுகின்றது. சமயத் தத்துவம், சமுதாயத்தத்துவம், பண்பாட்டுத் தத்துவம், வாழ்வியல் தத்துவம் எனப் பலவாறு தத்துவம் எனும் சொல் பயன்படுத்தப்படுகின்றது. இந்திய பண்பாட்டுத் தத்துவங்கள் பலவாகும்.

அவற்றுள் பெரியபுராணம் புலப்படுத்தும் பண்பாட்டுத் தத்துவமாக சைவசித்தாந்தம் விளங்குகின்றது.

**பண்பாடு - விளக்கம்**

பண்பாடு என்றால் என்ன என்பது பற்றிப் பலரும் பலவாறு விளக்கி வரையறை செய்துள்ளனர். பண்பாடு என்பது மரபு வழியில் புரிந்து கொண்டுள்ளவை பற்றிய ஓர் அமைப்பாகும். ஒரு சமுதாயத்தில் நிலவியிருக்கின்ற சிறந்த கொள்கைகள், உயர்ந்த எண்ணங்கள், விரிந்த நோக்கங்கள், கட்டுப்பாடான உறவு, பணிவு ஆகியவையே பண்பாடு என்று கே.எம். பணிக்கர் குறிப்பிடுகின்றார். (Panikar 1974: 2) பண்பாடு பற்றி மானிடவியலறிஞர் எட்வர்ட் பர்னட் டைலர் என்பவர்,

> **"பண்பாடு என்பது அறிவு, நம்பிக்கை, கலை, ஒழுக்க நெறிகள், சட்டம், வழக்கம் முதலானவையும், மனிதன் சமுதாயத்தில் ஓர் உறுப்பினராக இருந்து கற்கும் பிறதிறமைகளும் பழக்கங்களும் அடங்கிய முழுமைத் தொகுதியாகும்"** (E.B.Tylor 1958:1)

என்று கூறுவது பொருத்தமாகவுள்ளது. ஒரு பண்பாட்டைச் சேர்ந்தோரின் வாழ்வியலுக்கும் செயல்களுக்கும் நடத்தைமுறைகளுக்கும் எவை எவை அவசியமென்று கருதப்படுகின்றதோ அவையே அப்பண் பாட்டினரின் விழுமியங்கள் ஆகும். மக்கள் அனைவரும் கூட்டாகச் சேர்ந்து வாழ முற்படும்போது எவை எவை எல்லாம் இன்றியமையாதது எனக் கருதப்படுகின்றதோ அவை பண்பாட்டு விழுமியங்கள் (Cultural Values) எனப்படும். (பக்தவத்சலபாரதி *2003: 159*) பண்பாடு பற்றிய இத்தகைய கருத்துக்களின் அடிப்படையிலேயே பெரியபுராணப் பண்பாடு இங்கு நோக்கப்படுகின்றது.

**மரபு விளக்கம்**

"மரபு" என்னும் சொல் குணம், பழமை, முறைமை, வமிசம், இயல்பு, இலக்கணம், பெருமை, மேம்பாடு, நியாயம் என்னும் பல பொருளுடையது. மரபு தொன்று தொட்டு இருந்து வருவது. இது நேற்று - இன்று - நாளை என்று நோக்கப்படும் சிறப்புடைய தமிழ்ச் சொல்லாகும். எந்தப் பொருளை எந்தச் சொல்லால் எந்தவழியில் அறிவுடையோர் சொன்னார்களோ அந்தப் பொருளை அந்தச் சொல்லால் அந்த வழியிற் சொல்லுதலே மரபு ஆகும்.

**பண்பாட்டுத் தத்துவ மரபு**

சைவத் தமிழரின் பண்பாட்டுத் தத்துவம் சைவ சித்தாந்தம் ஆகும். சைவ சித்தாந்த தத்துவ மரபு மிகவும் தொன்மையானது. இத்தத்துவ

சிந்தனைகளின் ஊற்றுக்களை சிவாகமங்கள் மற்றும் திருமுறைப் பாடல்களில் காணமுடிகின்றன. இவ்வகையில் பன்னிரண்டாம் திருமுறையாக விளங்கும் பெரியபுராணத்தில் சைவப் பண்பாட்டுத் தத்துவமாகிய சைவ சித்தாந்தக் கருத்துக்கள் இடம் பெற்றிருப்பது குறிப்பிடத்தக்க அம்சமாகும்.

பன்னிரண்டாம் திருமுறையான பெரிய புராணத்தினை அடிப்படையாகக் கொண்டே மெய்கண்டார் சிவஞானபோதத்தின் பன்னிரண்டாம் சூத்திரத்தைக் கட்டமைத்துள்ளார். மாதவச்சிவஞான சுவாமிகள் சிவஞானபோதம் கூறும் சிவனடியார்களின் திருவேடத்தின் இயல்பு குறித்து சிவஞான பாடியத்தில் விளக்கும்போது திருவேடம் பற்றிய

"தூய வெண்ணீறு துதைந்த பொன் மேனியும் தாழ் வடமும்"
நாயகன் சேவடி தைவருஞ் சிந்தையும் நைந்துருகிப் பாய்வது
போல் அன்பு நீர் பொழி கண்ணும் பதிகச் செஞ்சொல
மேய செவ்வாயும் உடையார் புகுந்தனர் வீதியுள்ளே"

(பெரி.திருநா.பு. 140)

எனும் பெரியபராணப் பாடலையும்,

**"சிந்தை இடையறா அன்பும் திருமேனி தன்னில் அசைவும்**
**கந்தை மிகையாங் கருத்தும் கை உழவாரப் படைப்பும் வந்திழி**
**கண்ணீர் மழையும் வடிவிற் பொலி திருநீறும் அந்த மிலாத்திரு**
**வேடத்தரசும் எதிர்வந்தனைய"**

(பெரி.திருஞா.பு. 276)

என்ற திருநாவுக்கரசரின் திருவேடம் பற்றிய பெரியபுராணப் பாடலையுமே உதாரணத்திற்கு மேற்கோளாக எடுத்தாண்டுள்ளமை குறிப்பிடத்தக்க அம்சமாகும்.

சைவ சித்தாந்தம் கூறும் முப்பத்தாறு தத்துவங்களையே பெரியபுராணம் நுட்பமாக,

**"பேணுதத் துவங்கள் என்னும் பெருகு சோ பானம் ஏறி**
**ஆணையாம் சிவத்தைச் சார"** (பெரி.கண்ண.பு.103)

எனக் குறிப்பிடுகின்றது. சக்தியை "ஆணை" என்ற சொல்லால் மெய் கண்டதேவரும் குறிப்பிடுகின்றமை இவ்விடத்தில் நோக்குதற்குரியது.

**சைவசித்தாந்தக் கலைச் சொற்கள்.**

சிவஞானபோதம் முதலான சைவ சித்தாந்த சாத்திரங்கள் தோன்றுவதற்கு முன்னர் தோன்றிய பெரியபுராணத்தில், பதி, பசு, பாசம், இருவினை, மும்மலம், திருவைந்தெழுத்து, சரியை, கிரியை, யோகம், ஞானம், பெத்தம், சிவஞானம், கலை ஞானம், முத்தி, வீடு ஆகிய சைவ

சித்தாந்த தத்துவக் குறியீட்டுச் சொற்கள்இடம் பெற்றுள்ளமை குறிப்பிடத் தக்கது.

**இறைக் கொள்கை**

பெரியபுராணத்தின் இறைக் கொள்கை பெரியபுராண முதற் பாடலிலேயே வரையறுக்கப்பட்டுள்ளது.

**"உலகெலாம் உணர்ந் தோதற் கரியவன்**
**நிலவுலாவிய நீர்மலி வேணியன்**
**அலகில் சோதியன்அம்பலத் தாடுவான்**
**மலர் சிலம்படி வாழ்த்தி வணங்குவாம்"**

(பெரி..பாயிரம் 1)

என வரும் பெரியபுராணப் பாடல் 63 எழுத்துக்களைக் கொண்டது. இது அறுபத்து மூன்று தனியடியாரைச் சுட்டிக் காட்டு கின்றது. "உலகெலாம் உணர்ந் தோதற் கரியவன்" எனும் முதலாவது வரி சைவ சித்தாந்தம் கூறும் இறைவனின் சொருப லக்கணத்தையும் அரூப நிலையினையும், "நிலவுலாவிய நீர்மலி வேணியன்" எனும் வரி தடத் தலக்கணத்தினையும் உருவ நிலையினையும், "அலகில் சோதியன்" என்பது அருவுருவத் திருமேனியையும், "அம்பலத்தாடுவான்" என்பதில் நுட்பமாக ஐந்தொழிலையும், "சிலம்படி வாழ்த்தி வணங்கும்" என்பதில் சைவ சித்தாந்த திருவடிப் பேறாகிய முத்தி தத்துவத்தையும் சேக்கிழார் புலப்படுத்தியுள்ளமை விதந்து போற்றுதற்குரியது

**மும்மலக் கொள்கை**

ஆணவம், கன்மம் மாயை எனும் மும்மலங்களும் சைவசித்தாந்த நிலைப்பாட்டில் அநாதியானவை. இதுவே பெரியபுராணத்துள், "ஆதிவரும்மும்மலம்" என வருகின்றது.

**வினைக் கொள்கை**

இந்திய தத்துவங்கள் வினைக் கொள்கையை ஏற்றுக் கொண்டுள்ள போதிலும் அந்தந்த வினைப்பயன்களை அந்தந்த உயிர்களுக்கு கொண்டு சேர்ப்பவன் இறைவன்என்பதை ஏற்பதில்லை. வினைகள் சடம் என்பதால் உயிர்கள் செய்கின்ற வினைகளின் பயன்கள் தாமாகச் செய்தவரைச் சென்று சேரமாட்டாது. அது போல வினை செய்த உயிர்களும் தாம் செய்த வினை களின் பயன்களைத் தேடி நுகரமாட்டாது. இன்பத்தை விரும்புகின்ற உயிர்கள் ஒருபோதும் துன்பத்தை விரும்பி ஏற்பதில்லை. எனவே வினைப் பயன்களைச் செய்பவரிடத்தே கொண்டு சேர்ப்பவன் ஒருவன் வேண்டும். அவன் இறைவனே. இறையிருப்பினை நிறுவும் இந்த இறைக் கொள்கையும் வினைக்கொள்கையும் சைவ சித்தாந்தத்திற்கே உரியது. பிற சமய தத்துவங்களில் இது இல்லை. இதுவே பெரிய புராணத்தில்

**செய்வினையும் செய்வானும் அதன் பயனும்கொடுப்பவனும்**
**மெய்வகையால் நான்காகும் விதித்த பொருள்எனக் கொண்டே**
**இவ்வியல்பு சைவ நெறி அல்லவற்றுக்குஇல்லை என**
**உய்வகையாற் பொருள் சிவன் என்றருளலேஉணர்ந்தறிந்தார்.**

(பெரி.சாக்.பு.5)

என வருதலால் நன்கு தெளிவுறுத்தப்பட்டுள்ளது. இதனை மெய்கண்டதேவரும், உமாபதி சிவாச்சாரியாரும் முறையே சிவஞான போதத்திலும், திருவருட் பயனிலும் வரையறுத்துள்ளனர்.

பெரியபுராணத்தில் இடம்பெறும் வல்வினைச் செயற்பாடுகளுக்குரிய சைவசித்தாந்த விளக்கம் சிவஞானபோதம், திருக்களிற்றுப் படியார் முதலிய சித்தாந்த சாத்திரநூல்களில் தெளிவுபடுத்தப்பட்டுள்ளமை இங்கு குறிப்பிடற்பாலதாகும்

**குருலிங்க சங்கமக் கொள்கை**

சைவ சித்தாந்தத்தில் முத்திக்குரிய சாதனங்களுள் குருலிங்க சங்கம வழிபாடு கூறப்பட்டுள்ளது. பெரிய புராணம் புலப்படுத்தும் அடியார்கள்அனைவருமே இம்முத்திற வழிபாட்டு நெறிகளில் ஒன்றை மேற்கொண்டு முத்திப் பேறு எய்தினார்.

குருவழிபாடு செய்து முத்தி பெற்றவர்களாக திருஞான சம்பந்தர், திருநாவுக்கரசர், திருமூலர், குலச்சிறையார், அப்பூதியடிகள், மங்கயற்கரசியார் என்போரும், சிவலிங்க வழிபாட்டின் மூலம் முத்தி பெற்றவர்களாக மூர்த்தி நாயனார், கண்ணப்ப நாயனார், சண்டேசுவர நாயனார், சாக்கிய நாயனார் என்போரும், சங்கம் (அடியார்) வழிபாட்டின் மூலம் முத்தி பெற்றவர்களாகத் திருநீலகண்டர், இளையான்குடிமாறநாயனார், இயற்பகை நாயனார், காரைக்காலம்மையார் என்போரும் கூறப்படுகின்றனர்.

**இருவினையொப்புக் கொள்கை**

திருஞான சம்பந்தர் கூன் பாண்டியனுக்கு திருநீறு பூசியதும் அவன் முன்னை வினைகள் நீங்கி இருவினையொப்பு கைவரப்பெற்று இறைவனை அறியும் தன்மையினைப் பெற்றான் என்பது பெரிய புராணத்துள்,

**"தென்னவன் மாறன்தானும் சிரபுரத் தலைவர் தீண்டிப்**
**பொன்னவில் கொன்றை யார்தம் திருநீறு பூசப் பெற்று**
**முன்னைவல் வினையும் நீங்க முதல்வனை யறியும் தன்மை**
**துன்னினான் வினைகள் ஒத்துத் துலையென நிற்றலாலே"**

*(பெரி.திருஞா.பு. 819)*

எனவரும். இருவினைஒப்புகைவரப் பெற்றவர்களேயே சேக்கிழார்,

"கேடும் ஆக்கமும் கெட்ட திருவினார்
ஓடும் செம் பொனும் ஒக்கவே நோக்குவார்"

(திருக்கூட்டச்சிறப்பு, 8)

எனக் குறிப்பிடப்படுகின்றார்.

சைவ சிந்தாந்த தத்துவத்தை புலப்படுத்தும் வகையில் தமிழ் நாட்டில் தோன்றிய முதல் சைவத் தமிழ்க் காப்பியம் பெரியபுராணமாகும்.

பெரியபுராணம் பிற சமயக் கருத்துக்கள் பரவுவதை தடுத்து நிறுத்தியதோடு அல்லாமல் சைவ சமயத்திற்கும் சைவப் பண்பாட்டிற் கும் ஓர் உறுதியான அடிப்படையை அமைத்துக் கொடுத்து விட்ட தெனலாம்.

பெரிய புராணம் புலப்படுத்தும் சிவனடியார்களின் வாழ்க்கை பிற்காலத்தில் சைவ சித்தாந்த தத்துவத்தின் இலட்சியமாக அமைந்தது. பெரியபுராணம் கூறும் வரலாற்று ஓவியங்கள் சைவ சித்தாந்த சாஸ்திரங்களின் இலட்சிய ஓவியங்களாக உருமாறின

பெரிய புராணத்தில் காட்டப்பட்டுள்ள சிவனடியார்களின் வாழ்வியல் சித்தாந்த சைவ வாழ்க்கை நெறியாக அமைந்து விட்டது. இவ்வகையில் சைவசித்தாந்த தத்துவமே பெரியபுராணம் புலப்படுத்தும் பண்பாட்டுத்தத்துவம் என்று வரையறை செய்யலாம்.

மேலும் பெரியபுராணம் சைவசித்தாந்த தத்துவஞானத்தையும் சைவப்பண்பாட்டையும் நிலைநிறுத்தும் நோக்கை அடிப்படையாகக் கொண்டு கட்டமைக்கப்பட்டிருப்பினும் அக்காப்பியத்துள் சமணம், பௌத்தம், சாங்கிய யோகம், மீமாம்சை மற்றும் காளாமுகம், வீரசைவம், பைரவம், காபாலிகம் ஆகிய சைவதத்துவ ஞானங்களுக்குரிய குறிப்புக் களும் இடம் பெற்றுள்ளமை குறிப்பிடத்தக்கது. சேக்கிழார் தற்சார்புக் கொள்கை உடையவராக விளங்குகின்றார். இதனால் தான்சார்ந்த சமய தத்துவ பண்பாடுகளை மேன்மேலும் மேம்பாடு பெறச் செய்வதே அவரின் உன்னத குறிக்கோளாக இருப்பது தெரிகின்றது. இதனால் பெரிய புராணம் சைவசித்தாந்தத்துவத்தை மேம்படுத்துவதாகவே அமைந்து விடுகின்றது. சேக்கிழாருக்கு சைவசித்தாந்தத் தளம்வரை எட்டும் என்று மௌனத்தவமுனிவர் பொ.கைலாசபதியும் குறிப்பிடுகின்றமை குறிப்பிடத் தக்கது.

**சமயப் பண்பாடு**

சமயமும் பண்பாடும் பிரிக்கமுடியாதவை. சமயம்தான் பண்பாடு என்றும் பண்பாடுதான் சமயம் என்றும் அறிஞர் குறிப்பிடுவர். சமயத்திற்குச்சமயம் பண்பாட்டு மரபுகள் வேறுபடும். சைவசமயம்

காட்டும் பண்பாட்டு மரபுகள் பலவாகும். பெரியபுராணம் புலப்படுத்தும் சமயப்பண்பாட்டு மரபுகள் இங்கு நோக்கப்படுகின்றன.

**இந்துசமயக் கடவுளர் வழிபாட்டு மரபு**

சிவனடியார் மேன்மை கூறுவதும், சிவனின் அருட்டிறம் போற்றுவதும் பெரியபுராணத்தின் கொள்கையாயினும் அந்நூலில் விநாயகர், முருகன், திருமால், இலக்குமி, பிரமன், இந்திரன், ஐயனார், வயிரவர் ஆகியோரின் வழிபாடு பற்றிய செய்திகளும் உள்ளன. இவ்வகையில் தமிழகத்தில் அக்காலத்தில் நிலவிய இந்து சமய நெறி மரபுகள் பற்றியறிவதற்குப் பெரியபுராணம் துணைபுரிகின்றது.

**திருக்கோயில் வழிபாட்டு மரபு**

திருக்கோயிலை வழிபடும் மரபுகள் பல பெரியபுராணத்துள் பதிவாகியுள்ளன. "அர்ச்சனை பாட்டேயாகும்" என்ற அடிப்படையில் தேவாரமுதலிகள் மூவரும் பதிகம்பாடி இறைவழிபாடு செய்தனர். இப்பதிகவழிபாடு இசைமூலம் நிகழ்த்தப்பட்டது. குங்கிலியக்கலைய நாயனார் குங்கிலியத்தூபமிட்டு இறை வழிபாட்டினை நிகழ்த்தினார். கலியநாயனார் தினமும் திருவிளக்கேற்றி வழிபாடு செய்தார். நமிநந்தியடிகள் குளத்துநீரால் விளக்கேற்றி வழிபட்டார். முருக நாயனார் நந்தவனம் அமைத்து மலர் பறித்து மாலைகட்டி வழிபட்டார். இத்துடன் திருக்கோயிலை எப்படி வழிபாடு செய்வது என்பது பற்றிய குறிப்புகளும் பெரியபுராணத்துள் உள்ளன. திருக்கோயிலுள்குச் செல்லும்போது வெளியேகாணும் கோபுரத்தை முதலில் வணங்கி அதன்பின்னர் கோயிலின் பிரகாரத்தை வலதுபுறமாக வலம்வந்து அதன் பின்னர் மூலவரை முழுமையாக வணங்கும் வழிபாட்டு மரபை பெரியபுராணத்தில் காணலாம். திருக்கோயில்களில் பஞ்சாங்க நமஸ்காரம் செய்யும் மரபையும் பெரிய புராணத்தில் அறியலாம். மேலும் வழிபாட்டு நேரங்களன்றிப் பிறநேரங்களில் திருக்கோயிலிலும் திருமுற்றத்திலும் தங்குதல் மரபன்று என்பதையும் பெரியபுராணத்தில் (ஏயர்கோள் கலி.நா.பு.48) அறியமுடியும்.

**வேதப் பண்பாடு**

பெரியபுராணம் வேதவழிவரும் வைதிகசைவப் பண்பாட்டிற்குச் சிறப்பிடம் கொடுத்துள்ளது. இதனைப் பெரியபுராணத்துள் வரும்,

**"வேதநெறி தழைத்தோங்க மிகுசைவத்துறை விளங்க"**

(பெரி.திருஞா.பு.1)

**"வேதப் பயனாம் சைவம்"** எனும் வரிகள் புலப்படுத்துகின்றன.

(பெரி.சண்டே.பு.9)

**ஆகமப் பண்பாடு**

பெரியபுராணம் ஆகமப்பண்பாட்டைப் புலப்படுத்தும் சைவப்பண்பாட்டு நூலாக விளங்குகின்றது. சிவாகமங்கள் சிவனால் அருளப்பட்டன என்பதும், அவை கூறும் மரபில் வழிபாடு நடைபெற்றன என்பதும் பெரிய புராணத்தில்,

**எண்ணில் ஆகமம் இயம்பிய இறவைர்தாம் விரும்பும்**
**உண்மையாவது பூசனை என உரைத்ருள**
**அண்ண லார்தமை அர்ச்சனை புரியஆதரித்தாள்**
**பெண்ணின் நல்லவள் ஆயின பெருந்தவக்கொழுந்து**

பெரி.திருக்கு.பு.51)

எனவரும். அம்பாளே ஆகமமரபில் அர்ச்சனை செய்ததிறம் இங்கு கூறப்பட்டிருப்பது கவனித்தற்குரியது. சிவன் உமைக்கு ஆகமத்தை உரைத்தார் என்ற (பெரி.திருக்கு.பு..50) குறிப்பும் முக்கியமானது.

**உம்பர் நாயகர் பூசனைக்கு அவர்தாம்**
**உரைத்த ஆகமத்து உண்மையே தலைநின்று**
**எம்பிராட்டி அர்ச்சனைபுரிவதனுக்கு** (பெரி.திருக்கு பு.59)

எனவும்,

**"வேண்டின எல்லாம்**
**வேண்டும் போதினில் உதவமெய்ப்பூசை**
**எய்த ஆகமவிதி எலாம் செய்தாள்**
**உயிர்கள் யாவையும் ஈன்றஎம் பிராட்டி"** (பெரி.திருக்கு பு.60)

எனவும் வரும் குறிப்புகள் நோக்குதற்குரியவை.

சிவகோசரியார் காளத்திநாதரை ஆகமம் விதித்த நெறியில் மலரும், நீரும் கொண்டு பூசைபுரிந்தார். இது கண்ணப்பநாயனார் புராணத்தில்,

**"எய்தியசீர் ஆகமத்தில் இயம்பியபூசனைக்கு ஏற்பக்**
**கொய்தமல ரும்புனலும் முதலான கொண்டு அணைந்தார்**
**மைதழையும் கண்டத்து மலைமருந்தை வழிபாடு**
**செய்துவரும் தவம் உடைய முனிவர் சிவகோசரியார்"**

(பெரி.கண்ண. பு.135)

எனவரும்,

பூசலார் நாயனார் தமது மனத்துள் இறைவன் அமைவதற்குக் கட்டிய கோயிலே ஆகமமுறைப்படியே அமைக்கப்பட்டதென்பது பெரியபுராணத்தில்,

**நாதனுக்கு ஆலயம் செய்**
**நலம்பெறு நல்நாள் கொண்டே**
**ஆதரித்து ஆகமத்தால்**

அடிநிலை பாரித்து அன்பால்
காதலின் கங்குல் போதும்
கண்படாது எடுக்கல் உற்றார் (பெரி.பூசலா. பு.6)

எனவரும். அத்திபாரம் போடுவதற்கும் பிரதிட்டை செய்வதற்கும் நாள் பார்க்கும் பண்பாட்டு மரபினைப் பெரியபுராணம் மேற்காகண்டவாறு கூறுகின்றது.

**ஆகமம் சாராத வழிபாட்டு மரபு**

ஆகமம் சாராத நெறிமுறையில் நடைபெற்ற வழிபாட்டு மரபினை வேட்டுவர் குலத்தில் தோன்றிய திண்ணணார் செய்த வழிபாட்டு முறைகளில் காணமுடிகின்றது. இவர் இறைவனுக்குப் பன்றி இறைச்சியைத் தானே பதம் செய்து ருசி பார்த்துப் படையல் செய்தார். வாயிலே முகந்து கொண்ட நீரை இறைவர் திருமுடி மேல் உமிழ்ந்து நீராட்டினார். இவை ஆகமம் சாரா வழிபாடாகக் கொள்ளப்படினும் இவைதான் வேட்டுவ குலத்தின் பண்பாட்டு வழிபாட்டு மரபென்பது தெரிகின்றது. ஆகமம் சாராத அன்பு மயப்பட்ட வேட்டுவ குலப் பண்பாட்டு வழிபாட்டு நெறியை மேன்மைப்படுத்திக்காட்டவே இறைவன் அவரை வலது பக்கத்தில் என்றும் நிற்க அருள் கூர்ந்தார் என்பது பெரியபுராணப் பதிவாகும். கண்ணப்பரின் உயர்ந்த அன்பு வழிபாட்டு நெறியின் உன்னதத்தை உணர்ந்தே பன்னிரு திருமுறைகளில் இவர் ஒருவரே இடம்பெற்றுள்ளார் என்பதும் இங்கு குறிப்பிடத்தகத்து.

**அவதாரப் பண்பாட்டு மரபு**

இந்து சமயத்தில் "அவதாரம்" என்னும் சொல்லுக்கு "மேலிருந்து கீழிறங்கி வருதல்" எனப் பொருளுரைப்பர். வைணவ சமயமரபில் அவதாரக் கொள்கை மரபு தனிச்சிறப்புடையது. அது வைணவ இறைக்கொள்கையுடன் இணைந்துள்ளது. சைவப்பண்பாட்டிலும் இச்சொல் பயன்பாட்டில் இருந்துள்ளது. அது சிவனடியார்களோடு இணைந்துள்ளது. திருஞானசம்பந்தர், சுந்தரமூர்த்திநாயனார், திருநாவுக்கரசர், மானக்கஞ்சாறநாயனார், ஏயர்கோன்கலிக்காமநாயனார், விறன்மிண்டநாயனார் என்போர் அவதாரம் செய்ததாகப் பெரியபுராணம் கூறுவது சைவசமயப்பண்பாட்டின் தனிச்சிறப்பாகும். வைணவசமயத்தில் திருமால் அவதாரங்கள் எடுப்பதாகக் கூறப்பட சைவசமயப்பண்பாட்டில் அடியார்கள் அவதாரங்கள் பெறுவதாகக் கூறுவது தனிமரபாகும்.

**திருநீறு பூசும் பண்பாட்டு மரபு**

சைவசமயப்பண்பாட்டில் சிவனடியார்களுக்கான அடையாளத்தைப் புலப்படுத்தி நிற்கும் புனிதக் குறியீடு திருநீறாகும். திருநீறு புனிதம், தூய்மை என்பவற்றைச் சுட்டும் சமயப்பண்பாட்டுச்

சொல்லாகும். இதனையே சேக்கிழார் "பூசும் நீறுபோல் உள்ளும் புனிதர்கள்" என்பார். பெரியபுராணத்தை முடிக்கும் போதும் தனது குறிக்கோளை "தெய்வ வெண்திருநீறு சிறக்கவே" என்று முடிக்கின்றார். திருநீறு பூசியதன் பின்னரே உணவை உண்பது என்ற சைவப்பண் பாட்டினை அப்பூதியடிகள் வாழ்வில் அறியலாம்.

**விழாக்கள் நிகழ்த்தும் சமயப்பண்பாட்டு மரபு**

ஒரு சமூகத்தின் பண்பாடு மரபினை வெளிப்படுத்துவனவாக விழாக்கள் விளங்குகின்றன. பெரியபுராணத்தில் பல்வேறு வகையான விழாக்கள் குறித்த செய்திகள் இடம் பெற்றுள்ளன.இறைவனுக்கு நடந்த "பங்குனி உத்தரப் பெருவிழா பற்றிய செய்தியை" நமிநந்தியடிகள் புராணத்திற் காணலாம். நடேசருக்குகந்த "திருவாதிரைத் திருவிழா" சிறப்பாக நடைபெற்றதை திருநாவுக்கரசர் புராணம் குறிப்பிடுகின்றது. திருநல்லூரிலும் இறைவனுக்குத் திருவிழா நடைபெற்றது. இது அமர்நீதிபுராணத்துள் "மிக்க சீர்வளர் திருவிழா விருப்புடன் வணங்கி" என வரும். இவ்வாறாக சிவத்தலங்களில் திருவிழாக்கள் நடைபெற்ற பண்பாட்டு மரபைப் பெரியபுராணம் சுட்டிநிற்கின்றது. சோழநாட்டு வீதிகள் தோறும் விழாக்கள் நடந்தமை பெரிய புராணத்தின், "வீதிகள் விழாவின் ஆர்ப்பும்" எனவும், "வீதி எங்கும் விழாவணி" எனவும் வருதலால் அறியலாம்.

குழந்தை பிறந்தபோது கொண்டாடும் பிறந்தநாள் விழா பற்றிய செய்தியை திருஞானசம்பந்த மூர்த்தி நாயனார் புராணத்தில் காணலாம். இவ்விழா குழந்தை பிறந்து பத்தாம் நாளில் நடைபெற்றது. சீராளனுக்கு நடந்த பிறந்தநாள் விழா "திருமலிநெய்பாடல்" எனப்பட்டது.

வேடர்கள் வேட்டைக்குச் செல்லுங்கால் எடுக்கும் விழா "வில் விழா" எனப்பட்டது. அரசன் முடிசூடும் பொழுது முடிசூட்டு விழா நடைபெறும் மரபை மூர்த்தி நாயனார் வரலாறும், சேரமான் பெருமாள் நாயனார் வரலாறும் உணர்த்தும். "பெயர்சூட்டு விழா", "பருவந்தோறும் விழா" எனப் பல விழாக்கள் பற்றிய பதிவுகள் பெரியபுராணத்தில் புலப்படுத்தப்பட்டுள்ளமை குறிப்பிடத்தக்கது.

**கல்விப் பண்பாட்டு மரபு**

பள்ளிகளில் சிறுவர் கல்வி கற்கும் பாரம்பரியம் மிகவும் பழமை வாய்ந்தது. தமிழக சைவச்சிறுவர் பள்ளிக்கூடம் சென்று கல்வி கற்ற பண்பாட்டு மரபு பற்றிய பதிவுகள் பெரிய புராணத்தில் பதிவுசெய்யப் பட்டுள்ளன. குழந்தைகள் பள்ளிக்கூடங்களில் பயின்றமை பற்றி பெரியபுராணம் குறிப்பிடுகின்றது. இது சிறுதொண்டர் புராணத்தில்,

**"வந்துவளர் மூவாண்டில் மகர்வினை மங் கலஞ்செய்து**
**தந்தையாரும் பயந்த தாயாரும் தனிச்சிறுவர்**
**சிந்தைமலர் சொற்றெளிவிற் செழுங்கலைகள் பயிலத்தம்**
**பந்தமற வந்தவரைப் பள்ளியினில் இருத்தினார்**

(பெரி.சிறுத்.பு..22)

எனவரும். இதன் பிரகாரம் மூன்று வயதில் சிறுவர்கள் பள்ளிக்கூடத்தில் சேர்க்கப்பட்டனர் என்பதும், சொற்றெளிவு வந்தவுடன் அவர்களுக்கு செழுங்கலைகள் பயிற்றப்பட்டன என்பதும், பள்ளியில் சேர்க்கும்போது தந்தையும் தாயாரும் உடன் சென்றனர் என்பதும் தெரியவருகின்றது. சிறுத்தொண்டரின் மகன் சீராளனின் கல்வி வளர்ச்சியில் இதனை அறிய முடிகின்றது. சிறுத்தொண்டர் அடியார்க்கு அமுது படைப்பதற்காக சீராளதேவரைப் பள்ளிக்குச் சென்று அழைத்த குறிப்பானது அக்காலத்தில் சிறுவர்களைப் பெற்றோர்களே பள்ளி சென்று கூட்டிவரும் மரபைச் சுட்டி நிற்கின்றது. மேலும் சைவச் சிறுவர்கள் கல்வி கற்ற இடம் "பள்ளி" என்று அழைக்கப்பட்டமையும் குறிபிடத்தக்கது. இறையருள் இருந்தால் கல்வியும் அறிவும் தானாகவே வரும் என்பது திருஞானசம்பந்தரின் வரலாற்றில் அறிகின்றோம்.

திருஞானசம்பந்தர் கல்வி கற்காமலேயே கலைஞானம் பெற்றவராக விளங்கினார். அவருக்கு உபநயனம் செய்வதற்கு வருகைதந்த அந்தணர்களுக்கு ஏற்பட்ட ஐயங்களுக்கு உரிய விடையைத் திருஞான சம்பந்தரே வழங்கினார். கற்பிக்கும் ஆசிரியர்கள் மாணவர்களிடம் கற்றறியும் கல்விநிலை இன்றும் சில இடங்களில் இருக்கக் காண்கிறோம். சண்டேசுவர் நாயனாருக்கு ஐந்துவயதிலே வேதாகமக்கல்வி பயிற்றுவிக்கப்பட்டதையும் 7 வயதில் உபநயனம் நடைபெற்றதையும் வேதம், மற்றும் பிறகலைகள் பயிற்றப்பட்டமையும் தெரிகின்றது. தொழிற்கல்வி ஐந்து வயதின் பின்னர் வழங்கப்பட்டதை கண்ணப்ப நாயனார் வரலாற்றில் அறிகின்றோம். முற்றும் கற்றுத் தேறும்வரை கல்வி தொடர்ந்தமை பற்றியும் ஆசிரியர்களை மாணவர்கள் வணங்கினார்கள் என்பதும் பெரியபுராணப் புலப்பாடாகும். திருநாவுக்கரசர் புராணத்தி லும் அறிவுமுதிரும்வரை கற்க வேண்டுமெனக் கூறப்பட்டுள்ளது. அந்தணர்கள் மட்டுமன்றி பிறரும் கல்வி கற்கும் பண்பாட்டுமரபு பெரியபுராணத்தால் அறியப்படுகின்றது.

**கலைப்பண்பாட்டு மரபு**

பெரியபுராணத்தில், கட்டடம், சிற்பம், ஓவியம், இசை, நடனம் ஆகிய நுண்கலைகள் பற்றிய பண்பாட்டுச் செய்திகளும் பதிவாகியுள்ளன. சமயப்பண்பாடும் கலைப்பண்பாடும் ஒரே பண்பாடு எனக் கருதத்தக்க

விதத்தில் சமயப்பண்பாட்டுடன் கலைப்பண்பாடு பெரிய புராணத்தில் காட்டப்பட்டுள்ளது.

திருஞானசம்பந்தர், திருநாவுக்கரசர், சுந்தரர் ஆகியோரது தேவாரங்களில் வரும் நட்டபாடை, குறிஞ்சி, காந்தார பஞ்சமம், தக்கராகம், தக்கேசி முதலான பண்கள் பெரியபுராணப் பாடல்களிலும் அமைந்துள்ளமை குறிப்பிடத்தக்கது.

பண்ணோடு பாடக்கூடிய விதத்தில் தேவாரங்கள் விளங்குவது போல பெரியபுராணமும் பண்ணுடன்கூடிய பனுவல்களாக விளங்குகின்றன.

குழல், யாழ், வீணை போன்ற இசைக்கருவிகள் மற்றும் ஓசை, நயம் என்பன ஆனாயர் புராணத்தில் வருகின்றது. திருவாரூர் கோயிலின் கட்டடக் கலை பற்றிய சிறப்புகள் பெரியபுராணத்தில் கூறப்பட்டுள்ளது. ஆடற் கலைகள் பற்றிய பதிவுகளும் பெரியபுராணத்தில் புலப்படுத்தப் பட்டுள்ளது.

**சமூகப் பண்பாட்டு மரபு**

மனிதன், சமூகம், பண்பாடு என்ற மூன்றும் மிகவும் நெருக்கமான தொடர்புடையவை. சேக்கிழார் காலத்துச் சமூகம் சாதி அடிப்படையில் அமைந்திருந்தது. அக்கால சமூகத்தில் உயர்வும், தாழ்வும், வேற்றுமைகளும் நிலவின. ஆனால் பெரியபுராணம் காட்டுவது சாதீயம் கடந்த சைவப் பண்பாடாகும். தாழ்த்தப்பட்ட குலத்தில் பிறந்த திருநாளைப் போவார் நாயனார், தாழ்த்தப்பட்ட வகுப்பினராகக் கருதப்பட்ட வேடர் குலத்துதித்த கண்ணப்ப நாயனார், திருநீல கண்ட யாழ்ப்பாணர் என்ற மூவரை மட்டுமே சேக்கிழார் "ஐயர்" என்று உயர் நிலையில் குறிப்பிடுவார். வண்ணார் குலத்தில் பிறந்த திருக்குறிப்புத் தொண்டநாயனாரை சிவச்சாரிய மரபில் வந்த உமாபதிசிவாச்சாரியார் "எங்கள் திருக்குறிப்புத் தொண்டர்" என்று கூறுவதற்கு பெரியபுராணமே வித்திட்டது. பன்னிருதிருமுறைகளாலும் போற்றப்படும் ஒரே ஒரு நாயனார் கண்ணப்பர். இவர் வேடர்குலத்தினர். பெரியபுராணம் கூறும் அடியார்களுள் அந்தணர், (12), அரசர் (12), வணிகர் (8), வேளாளர் (13), ஆதிசைவர், வேடர், இடையர், வண்ணார், பாணர், பரதவர், புலையர் எனப் பல்வேறு சாதியினரும் உள்ளனர். இது சைவத்தின் சமூகப்பண் பாட்டின் சிறப்பாகும்.

ஒரு சமூகத்தின் பண்பாட்டை அச்சமூகத்தினரின் பழக்க வழக்கங்கள் புலப்படுத்தி நிற்கின்றன. பெரியபுராணம் காட்டும் சமூகப் பழக்கவழக்கங்கள் சில இன்றும் உள்ளன. சில மாறியுள்ளன. பல மறைந்து

போயின. பெரியபுராணச் சமூகத்தில் அடிமை முறை காணப்பட்டது. இதனையே சுந்தரரின் திருமணத்தின்போது வேதியர் வடிவில் வந்த இறைவன் "நம்பியாரூரன் என் அடியான்" என்று கூறித் தடுத்தாட்கொண்ட வரலாற்றைப் பெரியபுராணம் விரித்துரைக்கின்றது.

வறுமை காரணமாகப் பெற்ற பிள்ளையை விற்கும் கொடும் பழக்கம் பெரியபுராண காலம் தொடக்கமாக இருந்து வருகின்றது. சிறுத்தொண்டர் நாயனார் புராணத்தில் இச்செய்தி பதிவாகி உள்ளது. மனைவியை விற்கும் நிலையை கலியநாயனார் வாழ்வில் அறியலாம். "ஒருவனுக்கு ஒருத்தி" என்பதன்றி ஒருவன் இருமனைவியரைக் கொண்டிருந்த பழக்கத்தையும் பெரியபுராணம் உணர்த்தி நிற்கின்றது. திருமணம் செய்யாத பெண்கள் கன்னிமாடத்தில் வசிக்கும் சமூக வழக்கம், வீட்டுக்கு வரும் அடியார்களின் திருவடிகளைக் கழுவி இருக்கச் செய்யும் வழக்கம், கணவன் இறந்தால் உடன்கட்டை ஏறுதல், வீட்டுக்கு வந்து செல்கின்றவரைப் பின்னே சென்று வழியனுப்புதல், மனைவியின் கால்களைக் கணவன் வீழ்ந்து வணங்குதல், கண்ணேறு கழித்தல், நாள் பார்த்துக் கருமங்கள் செய்தல், சாதகம் பார்த்தல் போன்ற சமூகப் பழக்கவழக்கங்கள் பெரியபுராணம் காட்டும் சமூகப் பண்பாட்டு மரபுகளில் சிலவாகும்.

**பெண்களைத் தெய்வமாகப் போற்றும் பண்பாடு**

பெண்களைத் தெய்வமாகப் போற்றுதல் சைவப்பண்பாட்டு மரபாகும். இச்சமூகப்பண்பாட்டினைப் பெரியபுராணப் பெண்ணடியார்கள் மூலம் அறிந்து கொள்ளலாம். மங்கையர்க்கரசி தெய்வமாகப் போற்றப்பட்டார் என்பது பெரிய புராணத்தில்,

**"மங்கையர்க்குத் தனியரசி எங்கள் குலதெய்வம்**

**.......................................................**

**தென்னவர்குலப் பழிதீர்த்த தெய்வப் பாவை**

**............................................**

**போற்றுவார் கழல் எம்மால் போற்றலாமே"** *(பெரி.மங்கை.பு.1)*

என்று வருதலால் அறியலாம்.

**மனைவியைத் தெய்வமாகப் போற்றும் பண்பாடு**

பெண்களைத் தெய்வமாகப் போற்றும் சமூகப் பண்பாட்டைப் புலப்படுத்தும் பெரியபுராணம், மனைவியைக்கணவன் தெய்வமாகப் போற்றும் பாண்பாட்டைக் காரைக்கால்அம்மாயாரின் வாழ்வியலில் காட்டுகின்றது. காரைக்கால் அம்மையாரின் கணவரே தன் மனைவியை,

"மானுடம் இவர் தாம் அல்லர்
நல்பெருந் தெய்வம்..."
பொன்பதம் பணிந்தேன்" (பெரி.காரை.பு.47)

என்று மொழிவதால் இது அறியப்படுகின்றது.

**கலப்புத் திருமணப் பண்பாடு**

திருமலையில் வாழ்ந்த சிவநேசச் செட்டியார் தனது மகள் பூம்பாவையை அந்தணர் குலத்தில் அவதரித்த திருஞானசம்பந்தருக்குத் திருமணம் செய்ய வேண்டுமென்றே வளர்த்தார். இது அக்காலத்தில் வணிகர் குலப்பெண் அந்தணர்களைத் திருமணம் செய்யும் பண்பாட்டைச் சுட்டி நிற்கின்றது. சுந்தரர் வாழ்ந்த காலத்திலும் சைவப் பண்பாட்டில் திருமணம் செய்வதற்குச் சாதி தடையாக இருக்கவில்லை. இதனால்தான் பிராமணர் குலத்தில் தோன்றிய சுந்தரர் கணிகை மரபில் வந்த பரவையாரையும், வேளாளர் மரபில் தோன்றி சங்கிலியாரையும் திருமணம் செய்ய முடிந்தது.

சைவத் தமிழர் பண்பாடு சாதிகளற்ற ஒரு சமுதாயமாக மலரவேண்டும் என்பதுதான் சேக்கிழாரின் குறிக்கோளாக விளங்கியது.

**ஆடவர்க்கும் கற்பு**

"கற்பு" என்று கூறப்படும் பண்பாட்டு விழுமியம் பெண்களுக்கு மட்டுமன்றி ஆண்களுக்கும் இருக்க வேண்டுமென்பதை திருநீலகண்டருடைய வாழ்வியலைக் கூறுவதன் மூலம் சேக்கிழார் பெரியபுராணத்தில் புலப்படுத்துகின்றார். இல்லறப்பண்பாட்டின் செழுமையைத் திருநீலகண்டநாயனார் மற்றும் நாயனார் வரலாறுகள் நன்கு உணர்த்தி நிற்கின்றன. இல்லறத்தில் துறவறமும் ஆன்மீகமும் விளங்கியமைக்குப் பெரியபுராணம் சிறந்ததோர் எடுத்துக்காட்டாகும்.

**நீதி வழங்கும் பண்பாட்டு மரபு**

பெரியபுராண காலசமூகத்தில் நீதி வழங்குவதிலும் சட்டமுறைமைகள் கவனிக்கப்பட்டமை புலப்படுகின்றது. ஓர் உண்மையை மெய்ப்பிக்க ஆட்சி (நடைமுறை), ஆவணம் (எழுத்து), அயலார் தங்கள் காட்சி (பார்த்ததாகக் கூறும் பதிவு) என்பவை தடுத்தாட்கொண்ட புராணத்தில் (56) கூறப்பட்டுள்ளமை இங்கே குறிப்பிடத்தக்கது. நீதிவழங்குவதற்குத்தில்லையில் ஒரு பேரவை இருந்தது. அதில் மாமறையோர் நீதிபதிகளாக இருந்து நீதி வழங்கினர். திருச்சேய்ஞலூரிலும். இத்தகைய நீதி வழங்கும் அவை இருந்ததாக சண்டேசுவரநாயனார் புராணம்கூறும். இவ்வாறு பேரவை அமைத்து நீதிபதிகள் அமர்ந்து நீதி வழங்கிய சமூகப்பண்பாட்டு மரபை பெரிய

புராணம் புலப்படுத்துகின்றது.

**அரசர் பண்பாடு**

ஓர் அரசன் நாட்டை ஆளும் போது அவரிடம் இருக்க் வேண்டிய அரசனுக்குரிய பண்பாட்டுநிலை பெரியபுராணத்தில்,

**"மாநிலங்கா வலனாவான் மன்னுயிர்காக் குங்காலைத்**
**தானதனுக் கிடையூறு தன்னால் தன் பரிசனத்தால்,**
**ஊனமிகு பகைத்திறத்தால் கள்வரால் உயிர் தம்மால்**
**ஆன பயம் ஐந்துந்தீர் தறங்காப்பான் அல்லனோ"**

(பெரி.திருநகர.36)

என வரும். சேக்கிழார் அமைச்சராக இருந்தமையினால் ஓர் மன்னன் எங்ஙனம் நாட்டை ஆள வேண்டும் என்பது அவருக்குத் தெரிந்திருக்கும். இப்பாடலில் தன்னால், தன்பரிசனத்தால், பகையால், கள்வரால், உயிர்தம்மால் என்ற ஐந்து வழிகளினால் மக்களுக்குத் துன்பம் ஏற்படும் என்பதை மன்னன் அறிந்து அவற்றைப் போக்கிய அரச பண்பாடு தெரிகின்றது.

இவ்வைந்தின் மூலம் மக்களுக்கு இடையூறு ஏற்படும் என்பது பெரியபுராணத்தில் காட்டப்பட்டுள்ளது. இந்த ஐந்து இடையூறு களையும் களைந்து மக்களுக்கு வேண்டுவன செய்து அரசு புரியும் மன்னன் மக்களுக்கு இறைவன் ஆவான்.

பெரியபுராணத்துள் மன்னுயிர்காக்கும் அரசமரபினர் பலர் இடம்பெற்றுள்ளனர். அவர்களின் பண்பாட்டினையும் நோக்குதல் தகும்.

சைவர்களின் சமூகப்பண்பாட்டில் செங்கோண்மை என்ற நீதி வழங்கும் பண்பாடு சிறப்பாக இருந்தது. மனுநீதிச் சோழனின் மகன் வீதி விடங்கன் திருவாரூரில் பசுக்கன்று ஒன்றைத் தற்செயலாக அவனூர்ந்த தேரினால் கொன்றுவிட்டான். அதற்காக தாய்ப்பசுவின் துயரத்தை அறிந்து தானும் அவ்வாறே துன்புற வேண்டுமெனக் கருதி தன் ஒரே மகனை அத்தேரினாலேயே ஊர்ந்து கொன்றான். இது அரசரின் நீதியான அரசாட்சிப் பண்பாட்டினையும் அவரின் ஆன்மநேப்பண்பாட்டின் உச்சத்தையும் புலப்படுத்துகின்றது.

இவ்வாறு பெரியபுராணகால சமூகத்தில் அரசர் பண்பாடு, சட்டப்பண்பாடு, நீதிவழங்கும் பண்பாடு என்பன நிலைப்பாட்டில் இருந்தமை புலப்படும்.

**மொழிப் பண்பாடு**

ஒருவர் இன்னொருவரோடு பேசுகின்றபோது அவர் பயன்படுத் தும் சொற்கள் அவரின் சமூக பண்பாட்டைப் புலப்படுத்துவதாக

அமையும். "ஐயர்" என்ற சொல் உயர்வுடையோர், பண்பாடுடையோர் எனப் பொருள் தரும் சொல்லாகும். சமுதாயத்தில் தாழ்ந்தவராகக் கருதப்பட்ட நந்தனாரைச் சேக்கிழார் "ஐயர்" எனக் குறிப்பிடுவது சைவத்தின் உயர் மொழிப்பண்பாட்டைச் சுட்டி நிற்கின்றது. உயர்வில் லாதவராகக் கருதப்பட்ட திருநீலகண்ட யாழ்ப்பாணரையும் "ஐயர்" என்றே விளித்தார். வேட்டுவ இனத்தைச் சேர்ந்த கண்ணப்பரையும் "ஐயர் என்றே சேக்கிழார் அழைத்தார்.

இறைவனுக்கு வழங்கிய "ஐயர்" என்ற பெயர் பெரியபுராணம் கூறும் சிவனடியார்களுள் தாழ்ந்த குலத்தில் தோன்றிய நந்தனார், திருநீலகண்ட யாழ்பாணர், வேடர் கண்ணப்பர் என்போருக்கும் வழங்குவதன் மூலம் சைவத்தின் மனிதநேயம் மற்றும் மொழிப்பண்பாடு தெரிகின்றது.

அப்பூதியடிகள் இறந்த தன் மகனை இறந்தான் என்காது "இப்போது இங்கவன் உதவான்" என்ற மொழியில் கூறுவது சைவப் பண்பாட்டின் மொழிச் சிறப்பாகும். சிறுத்தொண்டநாயனாரின் வரலாற்றிலும் "இப்போது உதவான் அவன்" எனக் கூறுவதும் மொழிப் பண்பாட்டுச்சிறப்பாகும்.

திருஞானசம்பந்தர் தங்கியிருந்த மடத்திற்குத் தீமூட்டியபோது அத்தீ "பையவே சென்று பாண்டியர்க்காகவே" எனும் பணிவுடைய மொழியில் கூறுவது மொழியின் பண்பாட்டுப் பாங்காகும். மற்றவர்கள் புண்படும்படியான சொற்களைப் பயன்படுத்துவதைச் சேக்கிழார் தவிர்த்திருக்கின்றார். இது உயர்ந்த மொழிப்பண்பாட்டிற்கு உரைக்கல்லா கும். தண்டியடிகள் நாயனார் பிறவியிலேயே பார்வையிழந்தவர். சேக்கிழார் இவரைக் "குருடர்" எனக் கூறாது, "கண்காணார்" என்றும் "அந்தமிலால் அறிவுடையார்", என்றும் கூறுவது மொழிப் பண்பாட்டின் சிறப்பம்சமாகும்.

**சமூகப்பணி செய்யும் பண்பாட்டு மரபு**

சிவனடியார்கள் சமயவாதிகளாக, ஆன்மீக வாதிகளாக மட்டு மன்றி சமூகப்பண்பாட்டு மேம்பாட்டுச் செயல் வீரர்களாகவும் விளங்கினர் என்பதைப் பெரியபுராணம் தெளிவாகப் புலப்படுத்துகின்றது. அவர்கள் ஆற்றிய சமூகத் தொண்டுகள் அவர்களின் சமூக நேசிப்பை நன்கு விளக்கி நிற்கின்றது. பெரியபுராணம் கூறும் சிவனடியாரிகளின் தொண்டுகள் தனிப்பட்டவர்களுக்கும், சமூகத்திற்கும், உலகத்திற்கும் எனப் பல்திறப்பட்டு விளங்கின. திருஞானசம்பந்தர் திருப்பாச்லாச் சிராமத்தில் கொல்லிமழவன் மகளைப் பற்றியிருந்த முயலகன் என்னும் கொடிய நரம்பு

நோயைத் தீர்த்ததும், திருமருகலில் அரவந் தீண்டியிறந்த வணிகனுடன் வந்த கன்னிப் பெண்ணில் அழுகுரலைக் கேட்டு இரங்கி பதிகம்பாடி அந்த வணிகனை உயிர்பெற்றெழச் செய்து இருவருக்கும் திருமணம் செய்வித்தும், சில ஆண்டுகளுக்கு முன்னர் அரவம் தீண்டி யிறந்த பூம்பாவை என்னும் பெண்ணின் என்பு நிறைந்த குடத்திலிருந்து அவளை உயிர் பெறச் செய்து அவளுக்கு வீடு பேற்றுக்கு ஆட்படுத்தியதும், அரவம் தீண்டி இறந்த அப்பூதியடிகளின் மகனாகிய திருநாவுக்கரசரை திருப் பதிகம் பாடி உயிர்பெறச் செய்தும், அவிநாசியப்பரைத் தொழுது முதலை உண்ட மழலையை மீண்டும் வரவழைத்தும் ஆகியவை சிவனடியார்களின் ஆன்மீகத்தோடு இணைந்த சமூகப்பண்பாட்டு மேம்பாட்டினைச் சுட்டி நிற்கின்றது. இங்கு மக்களின் துன்ப துயரங்களை அறிந்து தொண்டாற்றும் சமூகப் பண்பாட்டை காண முடிகின்றது.

திருவீழிமிழலையில் மக்கள் உணர்வின்றி வாடியபோது திருநாவுக்கரசரும், திருஞான சம்பந்தரும் இறைவனிடம் படிக்காசுகளைப் பெற்றுக் கொண்டு அடியார்களின் பசிப்பிணியை போக்கியமை, கொங்கு நாட்டிலுள்ள திருக் கொடிமாடச் செங்குன்றில் கடுங்குளிரால்ஏற்பட்ட நச்சுக் காச்சலால் அவதியுற்ற அடியவர்களை நினைத்து இறைவனை வேண்டி அப்பிணி அந் நகரத்துக்கு மட்டுமன்றி அந்த நாட்டிற்கும் வராத படி தடுத்ததும், அடியவர்கள் நேரே சென்றுவழிபடும் பொருட்டு திருமறைக் காட்டுக் கோயிற் கதவைத் திறக்கச் செய்ததும் பெரிய புராணம் காட்டும் சமூக பண்பாட்டுத் தொண்டுக்களாகவே கருதவேண்டும. மதுரையில் சைவத்தை நிலை நிறுத்தியமை சைவ சமூகத்தொண்டே ஆகும்.

இவற்றால் சிவனடியார்களின் தொண்டுகள் சமூகப் பண்பாட்டு நோக்குடையவை என்பது தெளிவு பெறுகின்றது.

**பகைவரை மன்னிக்கும் பண்பாட்டு விழுமியம்**

பகைவரை மன்னித்தருளும் பண்பாட்டு விழுமியம் பெரிய புராணத்தில் புலப்படுத்தப்பட்டுள்ளது. மெய்ப்பொருள் நாயனார் ஓர் அரசர். இவர் சிவனடியார் திருவேடத்தையே மெய்பொருள் எனச் சிந்தை செய்பவர். முத்தநாதன் எனும்பகையரசன் மேனியெங்கும் திரு நீறு பூசிக் கொண்டு சிவனடியார் வேடமிட்டு இவரிடம் வந்து குறுவாளால் இவரைக் குத்தியநிலையில் அவனை ஒன்றும் செய்யாதே என்று காவலாளனைப் பணித்து அவனுக்கு ஏதும் இடையூறுநேராவண்ணம் பத்திரமாக அனுப்பிவைக்கும் படி ஆணையிட்டார். இதில் சிவவேடத் தையே சிவனாகக் கருதும் சித்தாந்த மெய்யியல் கரு அமைந்திருப்பதோடு பகைவனையும் மன்னிக்கும் சைவத்தின் மனிதநேயப் பண்பாட்டின்

உச்சத்தை உணரமுடிகின்றது.

**பொறுமை காக்கும் பண்பாட்டு விழுமியம்**

திருநாவுக்கரசருக்குச் சமணர்கள்பெருந்துன்பம் செய்தார்கள். சுண்ணாம்பு அறைக்குள் அடைத்து வைத்தார்கள், நஞ்சு கலந்த பாற்சோறு கொடுத்தார்கள், கொடிய யானையை அவரைக் கொல்லுமாறு ஏவினார்கள், கல்லோடு கட்டிக் கடலில் வீழ்த்தினர், எத்துணை துன்பம் செய்த போதிலும் அவற்றைப் பொறுத்துப் பொறுமையாக ஏற்றுக் கொண்டு வாழ வேண்டுமென்ற சைவப் பண்பாட்டை முதன் முதலாக தனது வாழ்வியலில் நடத்திக் காட்டியவர் திருநாவுக்கரசு நாயனாராவார். சைவப் பண்பாட்டு வரலாற்றில் அப்பரின் ஆன்மீக வீரம் தனிச்சிறப் புடையது.

**பணிவு எனும் பண்பாட்டு விழுமியம்**

சம்பந்தர், அப்பர் சந்திப்பு பணிவு எனும் பண்பாட்டு விழுமி யத்தை புலப்படுத்துகின்றது. சம்பந்தர் திருநாவுக்கரசரை, "அப்பரே" என்று அழைக்கத் திருநாவுக்கரசர் "அடியேன்" என்று கூறுவது பணிவின் வெளிப்பாடாகும். வயது குறைந்தவர்கள் வயது கூடியவர்களிடம் பணிவு காட்டினால் வயது கூடியவர்கள் வயது குறைந்தவர்களிடம் பணிவாக நடப்பர் என்பது அப்பர் சம்பந்தர் வாழ்வு காட்டும் பணிவு எனும் பண்பாட்டுப் பதிவாகும். எண்பத்தொரு வயது நிரம்பிய அப்பர் பதினாறு வயது நிரம்பிய சம்பந்தரை அடிபணிந்து தொழுதமை பணிவு எனும் பண்பாட்டின் முதிர்ச்சி எனலாம்.

**இலங்கையில் பெரியபுராணப் பண்பாட்டு மரபு**

இலங்கையில் வாழும் சைவத் தமிழரிடம் பெரியபுராணப் பண்பாட்டின் செல்வாக்கும் அதன் தாக்கமும் பெரிதும் காணப்படு கின்றது

ஸ்ரீலஸ்ரீ ஆறுமுக நாவலர் பெரியபுராணத்தைப் பதிப்பித் துள்ளார். அவர் பெரிய புராண வசனம் எழுதி வெளியிட்டுள்ளார். அவரே பெரிய புராண சூசனம் எழுத முயன்றார். இதனை ஏழாலை கலாநிதி பண்டிதர் மு.கந்தையா முற்றுப் பெறச்செய்தார். பெரிய புராணத்திற்கு முதன் முதல் எழுதப்பட்ட உரை ஆறுமுகத்தம்பிரானுடையதாகும். பஞ்ச புராணம் பாடும் போது பெரிய புராணப் பாடலைப் பாடியே அதனை நிறைவு செய்வர். பெரியபுராண படனம் இங்குள்ள ஆலயங்களிலும், மடங்களிலும் நடைபெறுவது வழக்கம். நாயன்மார் வழிபாடும் இங்குள்ள ஆலயங்களில் நடைபெறுகின்றது. அறுபத்து மூன்று நாயன்மார்களின் செப்புத் திருமேனிகள் முன்னேஸ்வர ஆலயத்தில் வழிபாட்டில் உள்ளன. நாயன்மார்களுக்கான குரு பூசைகள் இங்கு கொண்டாடப்படுகின்றன.

நல்லைக் கந்தன் ஆலய வீதியில் அறுபத்து மூவர் குரு பூசை மடம் காணப்படுகின்றது அங்கே நாயன்மார் குருபூசையும், புராண படனமும் அன்னதானமும் நடைபெற்றது. ஏழாலை கருணாகரப்பிள்ளையார் குரு மடத்தில் சேக்கிழாருக்குத் தனியான சந்நிதி உண்டு. மௌனத் தவமுனிவர் எனப்படும் பொ. கைலாசபதியும் சேக்கிழாரையும் பெரிய புராணத்தையும் பெருமைப்படுத்தியுள்ளார். யாழ்ப்பாணத்திலுள்ள "நாயன்மார் கட்டு"அறுபத்து மூன்று நாயன்மார் பண்பாட்டு மரபை வளர்த்த பெருமைக்குரிய ஊராகக் கருதப்படுகின்றது. இவ்வாறாக கந்தபுராண கலாசாரம் நிலவும் யாழ்ப்பாணத்து சைவவாழ்வியலில் பெரிய புராணப்பண்பாடும் சிறந்து விளங்கி வருகின்றது.

**நிறைவுரை**

இவ்வாறாக தமிழகத்தில் பலநூறு ஆண்டுகளாக நிலவிவந்த தமிழரின் பண்பாட்டுத் தத்துவமாகிய சைவசித்தாந்த தத்துவமரபு, சைவசமயப் பண்பாட்டு மரபுகள், கல்விப் பண்பாட்டு மரபுகள், கலைப் பண்பாட்டு மரபுகள், சமூகப் பண்பாட்டு மரபுகள் மற்றும் தொண்டு, அன்பு, பணிவு, பொறுமை, மனிதநேயம், ஆன்மநேயம், மன்னிக்கும் மாண்பு, கற்பு, நேர்மை, சொற்பிறழாமை போன்ற சைவப்பண்பாட்டு விழுமியங்கள் என்பனவற்றைப் புலப்படுத்தும் சைவப்பண்பாட்டுக் கருவூலமாக பெரியபுராணம் விளங்குவது நன்கு புலப்படுகின்றது. மேலும் இலங்கையில் வாழும் சைவத் தமிழரின் வாழ்வியலில் பெரியபுராணப் பண்பாட்டின் செல்வாக்கும் தாக்கமும் பெருமளவு இடம் பெற்றுள்ளமை

நன்றி

**துணை நூல்கள்:**


ஆறுமுகநாவலர் (ப.ஆ.), விசுவாவசு ஆண்டு, திருத்தொண்டர் புராணம், வித்தியாநுபாலன யந்திரசாலை, சென்னை.

இராசமாணிக்கனார்,மா., 1969, சேக்கிழார், அண்ணாமலைப் பல்கலைக்கழகம், அண்ணாமலைநகர்.

--------------------------------, 1990, பெரியபுராண ஆராய்ச்சி, பழனியப்பா பிரதர்ஸ், சென்னை.

கலைவாணி இராமநாதன், 1997, சைவசித்தாந்த ஒழுக்கவியல் அடிப்படைகள், கார்த்திகேயன் பிறைவேட் லிமிட்டெட், கொழும்பு.

கோபாலகிருஷ்ண ஐயர், ப., 1992, இந்துப்பண்பாட்டு மரபுகள், வித்யா வெளியீடு, யாழ்ப்பாணம்.

பக்தவத்சலபாரதி, 2003, பண்பாட்டு மானிடவியல், மெய்யப்பன் பதிப்பகம், சிதம்பரம்.

சண்முகலிங்கன்,என்., 2001, மரபுகளும் மாற்றங்களும், நாகலிங்கம் நூலாலயம், யாழ்ப்பாணம்.

சுப்பிரமணிய முதலியார், C.K., 1933, சேக்கிழார், சாது அச்சுக் கூடம், சென்னை.

சுப்பிரமணியபிள்ளை,கா., 1975, சேக்கிழார் அடிகள் வரலாறும் பெரியபுராண ஆராய்ச்சியும், கழகம், சென்னை.

ஞானசம்பந்தன்,அ.ச., 1994, பெரியபுராணம் ஓர் ஆய்வு, சேக்கிழார் ஆராய்ச்சி மையம், சென்னை.

ஞானகுமரன்,நா., 2003, மெய்யியல், செல்வம் வெளியீடு, பருத்தித்துறை.

மனோன்மணி சண்முகதாஸ், லலீசன், ச., (தொ.ஆ.) 2010, பெரியபுராணம் காட்டும் வாழ்வியல் கருத்தரங்கக் கட்டுரைகள், குமரன் புத்தக இல்லம், கொழும்பு.

Tylor,E.P., 1958, **Primitive Culture,** Harper & Row, New York.

Panikkar, K.M, 1974, Essential Features of Indian Culture, Bharathiya Vidya Bhavan Bombay.



## பேராசிரியர் மா. வேதநாதன்

நயினாதீவைப் பிறப்பிடமாகக் கொண்ட பேராசிரியர் மாரிமுத்து வேதநாதன் அவர்கள் யாழ்ப்பாணப் பல்கலைக் கழகத்தில் 1981ஆம் ஆண்டு இந்துநாகரிகச் சிறப்புக்கலை மாணிப் பாடத்தில் முதலாம் பிரிவில் பட்டம் பெற்றவர்.

யாழ்ப்பாணப் பல்கலைக்கழகத்தினால் வழங்கப்படும் டாக்டர் ஆனந்தக் குமாரசாமி நினைவுப்புலமைப்பரிசு. லேடி இராமநாதன் நினைவுப் புலமைப்பரிசு என்பவற்றைப் பெற்றவர்.

1984ஆம் ஆண்டு யாழ்ப்பாணப் பல்கலைக்கழக இந்துநாகரிகத்துறையில் உதவி விரிவுரையாளராக நியமனம் பெற்றதைத் தொடர்ந்து 1990ஆம் ஆண்டு யாழ்ப்பாணப் பல்கலைக்கழகத்தில் முதுகலைமாணிப்பட்டம் பெற்றார். "இலங்கையில் சக்தி வழிபாடு" என்பது இவரது முதுகலைமாணிப்பட்ட ஆய்வாகும். இவர் தனது கலாநிதிப்பட்டத்தினை தஞ்சாவூர் தமிழ்ப் பல்கலைக்கழகத்தில் பெற்றவர். "கந்தபுராணத்தில் சைவசித்தாந்தக் கோட்பாடுகள்" என்பது இவரது கலாநிதிப்பட்ட ஆய்வாகும்.

இவர் அழகப்பாப் பல்கலைக்கழகத்தில் கோயிற் கலையில் பட்டப்பின் படிப்பு டிப்ளோமா சான்றிதழையும். அண்ணாமலைப் பல்கலைக்கழகத்தில் சைவசித்தாந்த டிப்ளோமா சான்றிதழையும். மதுரை காமராசர் பல்கலைக்கழகத்தில் சோதிடக்கலையில் டிப்ளோமா சான்றிதழையும் பெற்றவர். திருவாவடுதுறை ஆதீன சைவசித்தாந்த மையத்தில் மூன்று ஆண்டுகள் பயின்று சித்தாந்தரத்தினம் எனும் பட்டத்தையும் பெற்றவர். இந்துநாகரிகத்துறைத் தலை-வராக 2006 முதல் பணியாற்றிவரும் இவர் சைவசித்தாந்த முதுகலைமாணி இணைப்பாளராக இரண்டு ஆண்டுகளும். புறநிலைப் படிப்புகள் அலகின் இணைப்பாளராக இரண்டாண்டும் பணிபுரிந்துள்ளார்.

யாழ்ப்பாணப் பல்கலைக்கழக இந்துமன்றப் பெருந்தலைவராக 2008ஆம் ஆண்டு முதல் இருந்து வருகின்றார்.

இவர் சர்வதேசக் கருத்தரங்குகளில் கலந்து பல ஆய்வுக்கட்டுரைகள் சமர்ப்பித்துள்ளார். இந்து நாகரிகம். சைவசித்தாந்தம் சார்ந்த நூல்களை வெளியிட்டுள்ளார். மேலும் இந்துநாகரிகம். சைவசித்தாந்தம் மற்றும் இசை. நடனம் தொடர்பான பல நூல்களையும் பதிப்பித்துள்ளார்.

Harikanan, Jaffna.